முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மூர்த்தி நாயனார் அருளிய ஒளி சூட்சும ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

07.01.2019, திங்கட்கிழமை

1. **கலிமீட்பின் கந்த குருவே**
**கருணையாக வந்த ஞான குருவே**
**அழியாமை ஞானம் தந்தருளி**
**ஆறுமுக அரங்கனாக வந்த குருவே**

2. குருவே உன் பெருமை கூறி
குறையிலா ஒளி சூட்சும நூலை
உறுதிபட **விளம்பி சிலை திங்கள்**
**உயர்வான மூவேழீர் திகதி சோமவாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 23ம் நாள் 07.01.2019, திங்கட்கிழமை)**

3. **வாரமதில் மூர்த்தி நாயனார் யானும்**
வழங்கிடுவேன் உலகோர் நலமுற
பாரமான சகல இன்னல்களும்
பாருலகில் அகன்று அமைதிபெற

4. அமைதிபெற அரங்கன் காட்டும்
ஆறுமுகன் ஞானவழிக்கு வர
அமைதிபட செபதபம் தன்னை
ஆறுமுகனார் பேரில் செய்ய

5. செய்யவே கஷ்டங்கள் விலகும்
சுத்தநெறிபட அரங்க மகானிடம்
மெய்ஞான தீட்சை அடைந்து
முழுமதி கால பூசை கலந்தும்

6. கலந்துமே ஞானிகளின் சக்தி
கலந்து தரும் அருளமுது உண்டு
பலம்பெற அரங்கன் சீடர்களாகி
பணிந்து ஞானவழித் தொடர

7. தொடரவே துன்பங்கள் விலகும்
தொடரவே தேட்டு தனவளம்
இடரில்லாத பொருள் வளம்
எதிலும் பாதுகாப்பு பலமும்

8. பலமான சூழலும் இயற்கைவழி
பாதுகாப்பும் பெருகி பேருலகில்
வளமும் வளர்ச்சி நிலைகளும்
வந்தடையும் ஆறுமுகனார் அருளால்

9. அருளால் தேற்றம் சடுதி
அருளால் அழிவுகள் விலகி
அருளால் ஆளுமை சிறப்பு
ஆறுமுகன் ஞானஆட்சியாக மாறும்

10. மாறவே கலிகால மக்களை
மகத்துவம்பட அணுகி அருளும்
ஆறுமுக அரங்க ஞானியரை
அகிலமே ஞானகுருவாக ஏற்றுவர

11. வருகவே வையகம் மாறும்
வருகவே ஞானயுகமாகவே
மாறும் அரங்கன் தருமத்தால்
மொழிந்திட்ட ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் மூர்த்தி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

பொல்லா மாமாயை சூழ்ந்திட்ட துன்பம்மிக்க கலியுகத்தினில் இருந்து மக்களைக் காத்திடவே முருகப்பெருமானின் அம்சமாக வந்த கந்தமகா குருவே, கருணையே வடிவமாக இவ்வுலகினில் அவதரித்த ஞானகுருவே அழிவிலாமை எனும் அழியா ஞானம் தந்தருளி ஆறுமுக அரங்கமகா தேசிகனாக உலகினில் அவதரித்திட்ட சற்குருவே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 23ம் நாள் 07.01.2019, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே மூர்த்தி நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மூர்த்திநாயனார்.

உலக மக்களுக்கு பாரமாய் உள்ள எல்லாவிதமான இன்னல்களும் இவ்வுலகினில் இருந்து அகன்று உலகமே அமைதிமிக்க துன்பமற்ற உலகமாக மாறிட வேண்டுமாயின் உலக மக்கள் எல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டுகின்ற ஞானவழிக்கு வர வேண்டும்.

உலக மக்களெல்லாம் அரங்கனின் ஞானவழிக்கு வந்து அமைதியுடன் மனம் உருகி ஜெபதபங்களை முருகப்பெருமானின் திருநாமங்களைச் சொல்லி செய்து வர வேண்டும். முருகப்பெருமானின் திருநாமங்களை சொல்ல சொல்ல அவரவரைப் பற்றிய துன்பங்கள் எல்லாம் விலகிடும்.

அரங்கன் கூறும் தூயநெறியினை ஏற்றுக் கொண்டு வாழ்வினில் கடைப்பிடிப்பதுடன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடி பணிந்து வணங்கி அரங்கரிடத்து மெய்ஞான தீட்சைகளை பெற்று அரங்கன் உலக நலன் கருதி செய்கின்ற பௌர்ணமி சிறப்பு சித்தர் வழிபாடுகளில் தவறாது கலந்து கொண்டு ஆங்கே ஞானிகள் அருளாசியுடன் ஞானிகளின் சக்தி கலந்து அளிக்கப்படுகின்ற அருளமுதான உணவினை உண்டு அரங்கனின் அன்பிற்கு பாத்திரமாகி அரங்கனின் தானதருமங்களில் கலந்து தொண்டுகள் செய்தும் பொருளுதவிகள் செய்தும் வந்து, அரங்கனின் சீடர்களாக ஆகி அரங்கனின் திருவடி பணிந்து தொடர்ந்து வர வேண்டும்.

அரங்கன் திருவடி பணிந்து தொடர்ந்து வரவர, அவரவரைப் பற்றிய துன்பங்கள் எல்லாம் தானே விலகிடும். தொடரத் தொடர நல்ல பொருள் வரவும், துன்பம் அற்ற பொருளாதார மேம்பாடும் உண்டாகி எங்கும் எதிலும் பாதுகாப்பும் பலமும் உண்டாகி நல்ல பாதுகாப்பான சூழ்நிலைகள் உருவாகி இயற்கையினாலும் பாதுகாப்பு உண்டாகி இவ்வுலகில் எல்லா வளமும் வளர்ச்சி நிலைகளும் பெருகி அவர்தமக்கு வந்தடையும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருளாசியினால்.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருளினால் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்வது உறுதி உறுதி, அரங்கனின் அருளால் கடைத்தேற்றம் விரைந்து உண்டாகும். அரங்கன் அருளால் உலகினில் அழிவுகள் விரைந்து விலகும். அரங்கனின் அருளால் உலகினில் நல்லாட்சி சிறப்பாக அமையும், அது முருகப்பெருமானின் ஞானஆட்சியாகவும் மாறிடும்.

உலகமெலாம் முருகப்பெருமானின் ஞானஆட்சியாக மாறிட கலியுக மக்களை தாயன்போடு அணுகி மகத்துவம்பட அருள் செய்து காத்திடும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை உலக மக்களெல்லாம் ஞானகுருவாக ஏற்றுக் கொண்டு அரங்கனை ஞானவழியில் பின் தொடர்ந்து வரவர, இவ்வுலகம் விரைந்து மாற்றம் பெறும். மாற்றமடைந்து ஞானயுகமாக ஆறுமுக அரங்கனின் தர்மத்தால் விரைந்து மாறிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் மூர்த்தி நாயனார்.

–சுபம்–